# DEPOSITION OF WITNESS

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.65/2022**

**Prosecution witness : அ.சா.5** **Date : 14.09.2023**

| | |
|---|---|
| **Name : மகாலிங்கம்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1– 3 present. ) (Accused 4, 5 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மாதநாயக்கன்பட்டியல் குடியிருந்து விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 ஐ தெரியும். எதிரிகள் 4, 5 எனக்கு தெரியாது. எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் அ.சா.1 நிலம் வாங்கியிருந்தார். அந்த இடத்தில் கார்மென்ட்ஸ் வைத்த நடத்தி வந்தார். நான் அந்த இடத்தில் தெவம் செய்வதற்காக வேண்டி, நிலத்தை சுத்தம் செய்ய கேட்டுக்கொண்டதன் பேரில் சுத்தம் செய்ய முற்பட்டபோது, கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பாக, காலை நேரத்தில் கோவிந்தராஜின் நிலத்தில் அருகே பொங்கல் பண்டிகை நடைபெறுவதற்கு முன்பாக பிரச்சனை நடந்ததாக சொன்னார்கள். என்ன பிரச்சனை என்பது எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 16.02.2021–ம் தேதி கோவிந்தராஜ் என்பவருக்கு சாதகமாக தீர்ப்பு வந்ததா என்றால் எனக்கு தெரியாது. கடந்த 21.02.2021–ம் தேதி மாலை 5

மணிக்கு கோவிந்தராஜ் கம்பெனி அருகே அம்மன் கோவில் பண்டிகை நடைபெறுவதை ஒட்டி கோவிலை சுத்தம் செய்துகொண்டிருந்தார்களா என்றால் ஆமாம். அப்போது, கோவிந்தராஜுக்கு சாதகமாக தீர்பு வந்ததால் ஆட்களை விட்டு நிலத்தை சுத்தம் செய்ய முயற்சி செய்தோம் என்றால் சரிதான். அப்போது, எதிரிகள் கெட்டவார்த்தையால் பேசி கையில் வைத்திருந்த கம்பியால் கோவிந்தராஜை உனக்கு தீர்பு வந்தாலும் பரவாயில்லை உன்னை நிலத்தில் விடமாட்டேன் என்று சொல்லி இடது கை மோதிரவிரலில் நடுவிரலில் அடித்து உள்காயத்தை ஏற்படுத்தினார் என்றால் இல்லை. நேசமணி கத்தியால் கோவிந்தராஜின் இடது முழங்கையில் கீறினார் என்றால் எனக்கு தெரியாது. மகேந்திரன் என்பவர் அ.சா.1 ஐ கையால் முதுகில் அடித்தார் என்றால் எனக்கு தெரியாது. எதிரி நேசமணி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.65/2022**

**Prosecution witness : அ.சா.6 Date : 14.09.2023**

| | |
|---|---|
| **Name : மகாலிங்கம்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1– 3 present. ) (Accused 4, 5 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>முதல் விசாரணை</u>

1) நான் தொங்காலனூரில் குடியிருந்து டைலர் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 ஐ தெரியும். கடந்த 21.02.2021–ம் தேதி நாங்க்ள் தெவம் போட்டிருந்தோம். அப்போது, அந்த பகுதியில் உள்ள நிலத்தை சரிசெய்தோம். அங்கு பெரியாண்டிச்சி அம்மன் கோவில் பொங்கல் பண்டிகைக்காக சுத்தம் செய்தோம். அங்கு அ.சா.1 க்கு நிலம் பாத்தியப்பட்டதாக நினைத்து அவரிடம் போய் சுத்தம் செய்ய நிலத்தை கேட்டோம்.

2) அ.சா.1 நிலத்தை சுத்தம் செய்ய அனுமதி கொடுத்தார். நாங்கள் சுத்தம் செய்துகொண்டிருந்தபோது, ஆஜர் எதிரிகள் வந்து சுத்தம் செய்யாதீர்கள் என்று நிலம் எங்களுக்கு சொந்தமானது என்று சொல்லி தடுத்தார்கள். நிலம் அவர்களுக்கு பாத்தியம் என்று சொன்னார்கள். அவர்களுக்குள் வாய்தகறாறு ஏற்படும் போது, நாங்கள் அந்த இடத்தில் இருந்து வெளியேறினோம். என்ன பிரச்சனை என்பது எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) கடந்த 16.02.2021–ம் தேதி கோவிந்தராஜ் என்பவருக்கு சாதகமாக தீர்பு வந்ததா என்றால் எனக்கு தெரியாது. கடந்த 21.02.2021–ம் தேதி மாலை 5 மணிக்கு கோவிந்தராஜ் கம்பெனி அருகே அம்மன் கோவில் பண்டிகை நடைபெறுவதை ஒட்டி கோவிலை சுத்தம் செய்துகொண்டிருந்தார்களா என்றால் ஆமாம். அப்போது, கோவிந்தராஜுக்கு சாதகமாக தீர்பு வந்ததால் ஆட்களை விட்டு நிலத்தை சுத்தம் செய்ய முயற்சி செய்தோம் என்றால் சரிதான். அப்போது, எதிரிகள் கெட்டவார்த்தையால் பேசி கையில் வைத்திருந்த கம்பியால் கோவிந்தராஜை உனக்கு தீர்பு வந்தாலும் பரவாயில்லை உன்னை நிலத்தில் விடமாட்டேன் என்று சொல்லி இடது கை மோதிரவிரலில் நடுவிரலில் அடித்து உள்காயத்தை ஏற்படுத்தினார் என்றால் இல்லை. நேசமணி கத்தியால் கோவிந்தராஜின் இடது முழங்கையில் கீறினார் என்றால் எனக்கு தெரியாது. மகேந்திரன் என்பவர் அ.சா.1 ஐ கையால் முதுகில் அடித்தார் என்றால் எனக்கு தெரியாது. எதிரி நேசமணி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**